# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690
தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg



| | |
|---|---|
| பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பவுல் இயோ *fryeopaul@gmail.com* |
| உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | பங்கு அலுவலகம்: *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |



| | | |
|---|---|---|
| 01 ஏப்ரல் 2018 | **உயிர்ப்புப் பெருவிழா** | இரண்டாம் ஆண்டு |



அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

# உங்கள் சிந்தனைக்கு

அன்பார்ந்த இறைமக்களே! ‘சாவு வீழ்ந்தது, வெற்றி கிடைத்தது, இயேசு உயிர்த்தார், அல்லேலூயா’ என்னும் வெற்றிப் பாடல் நம் உள்ளங்களில் இன்று ஒலிக்கின்றது.

பாலஸ்தீன நாட்டின் பாரம்பரியப்படி, ஒருவர் இறந்த மூன்று நாளுக்குப் பிறகு, கல்லறைக்கு அவருடைய உறவினர்கள் சென்று வருவது வழக்கம். ஏனென்றால், முதல் மூன்று நாட்கள் இறந்தவரின் ஆவி கல்லறையைச் சுற்றி வந்து, தன்னுடைய உடலுக்குள் மீண்டும் செல்ல முயற்சி செய்யும் என்பது யூதர்களின் நம்பிக்கை. ஆனால், மூன்று நாட்களுக்குப் பின் உடல் அழுகி விடுவதால், ஆவிக்கு தன்னுடைய உடலை அடையாளம் காண முடியாமல், தனது உலகத்திற்கு திரும்பிவிடும். வாரத்தின் முதல் நாள் என்பது ஞாயிற்றுக்கிழமை. யூதர்களுக்கு ஓய்வுநாள் சனிக்கிழமை. ஓய்வுநாள் முடிந்தவுடன் விடியற்காலையிலேயே, மகதலா மரியா கல்லறைக்குச் செல்கிறாள். இயேசுவின் உடலைக் காணவில்லை என்றவுடன், அவள் திரும்பி வந்து பேதுருவிடமும், யோவானிடமும் சொல்கிறாள்.

இயேசுவின் உயிர்ப்பின் செய்தியை முதலில் அறியும் பேறு மகதலா மரியா, யாக்கோபின் தாய் மரியா, சலோமி ஆகிய பெண்களுக்குத்தான் கிடைத்தது. ஆண்களே பெண்களைவிட வீரமும், துணிவும் நிறைந்தவர்கள் என்னும் போலிப் பரப்புரையை வரலாற்றில் பல பெண்கள் உடைத்தெறிந்திருக்கிறார்கள். இந்தப் பெண்களும் அவ்வாறே! ஆண் சீடர்கள் அஞ்சி நடுங்கி, ஒளிந்து கொண்டபோது, இந்தப் பெண்கள் துணிவுடன் ‘காலையிலேயே கதிரவன் எழும் வேளையில் கல்லறைக்குச் சென்றார்கள்’. எங்கே அன்பு உள்ளதோ, அங்கே அச்சம் இல்லை என்னும் யோவானின் (1 யோவான் 4:18) சொற்களை இவர்கள் எண்பித்துள்ளனர். இயேசு உயிருடன் எழுப்பப் பட்டார் என்னும் நற்செய்தியை வானதூதர் வழியாக இவர்கள் பெற்றுக் கொண்டனர்.

அன்பு அச்சத்தை வெல்கிறது, அன்பு சாவையும் வெல்கிறது. இயேசு தந்தையின் மீது கொண்ட அன்பினால் சாவின் மீது இருந்த அச்சத்தை வென்றார். சாவையும் வென்றார். மகதலா மரியா இயேசுவின் மீது கொண்ட அன்பினால் சாவு, இருள், கல்லறை, பிலாத்துவின் வீரர்கள் என்னும் அனைத்து அச்சங்களையும் வென்றார். இயேசுவின் உயிர்ப்புச் செய்தியை முதன்முதல் அறிந்துகொண்டார்.

கிறிஸ்து மரித்தார், கிறிஸ்து உயிர்த்தார், கிறிஸ்து மீண்டும் வருவார் என்பது நமது நம்பிக்கையின் மறைபொருள். தளர்ந்து போயிருக்கிற, துன்பங்களால் வாழ்வே வெறுத்துப்போயிருக்கிற நமக்கு இது மிகப்பெரிய ஆறுதல் செய்தி. கிறிஸ்து மீண்டும் வருவார் என்கிற செய்தியே நமக்கு மகிழ்வைத்தர வேண்டும். துன்பங்களைப்பற்றி கவலைப்படாமல், இயேசு வருவார் என்கிற புத்துணர்ச்சியோடு வாழ்வை எதிர்கொள்ளுவோம். இதுவே உயிர்ப்பு விழா இன்று நமக்குத் தரும் செய்தி. இறைவனையும், மனிதரையும் அன்பு செய்வோம். அச்சமின்றி வாழ்வோம், சாவை வெல்வோம். அனைவருக்கும் இறை இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள்.

# இறை இரக்கத் திருவிழா

**4, 5, 6 ஏப்ரல் 2018, (புதன், வியாழன், வெள்ளி) மாலை 7 மணிக்கு** நமது ஆலயத்தில்
ஆங்கிலத்தில் இறை இரக்க நவநாளும், மன்றாட்டுகளும் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும்.

தமிழில் **6 & 7 ஏப்ரல் 2018, (வெள்ளி, சனி) இரவு 7 மணிக்கு** புனித பெர்னதெத் அறையிலும்,
8 ஏப்ரல் 2018, (ஞாயிறு) மாலை 6 மணிக்கு ஆலயத்திலும், நவநாளும் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும்.
அனைவரும் இதில் கலந்து இறை இரக்க ஆண்டவரின் ஆசீர் பெற அன்புடன் அழைக்கிறோம். நன்றி.
தூய லூர்து அன்னை ஆலய இறை இரக்க செபக்குழுவினர்

# தமிழ் மறைக்கல்வி வகுப்புகள்

அடுத்த வாரம் முதல் தமிழில் மறைக்கல்வி வகுப்புகள் ஆரம்பமாகவிருக்கிறது.
ஞாயிறு காலை 9:30 மணித் தமிழ் திருப்பலி முடிந்தவுடன் சுமார் 45 நிமிடங்களுக்கு மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறும். நம் பிள்ளைகளுக்கு நன்கு புரியும் வண்ணம் தினசரி செபங்களும், திருப்பலி செபங்களும், பாடங்களும், தமிழில் விளக்கிச் சொல்லித்தரப்பட்டு, புதுநன்மை மற்றும் உறுதிப்பூசுதல் பெற அவர்கள் தயாரிக்கப்படுவர். தமிழ் கத்தோலிக்கப் பெற்றொர்கள் அனைவரும் உங்கள் பிள்ளைகளை தகுந்த வகுப்புக்களில் உடனே பதிவு செய்யும்படி அன்புடன் வேண்டுகிறோம். நன்றி.

## முழு இரவுத் திருவிழிப்புச் செப வழிபாடு

**14-04-2018, சனி, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**

இரவு முழுதும் விழித்திருந்து, நாம் சுமக்கும் பாரங்களை கடவுளிடம் இறக்கி வைத்து, அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

## இடைவிடா சகாய அன்னை நவநாள்

சனிக்கிழமைகளில் இரவு 8:30 மணிக்கு தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெறும். அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெற அனைவரும் வருக.

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு முறை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| து | ந் | டி | வு | ப் | ழ் | கீ | தி | ல் | ர் |
| டு | ல | ய | த | ழ் | தீ | க | ள | டீ | தை |
| மே | த | வ | வெ | ட | வா | ஓ | ட் | கா | தெ |
| லு | டி | டு | ற் | அ | ல | பு | ம | பி | ண் |
| ல | யா | ல் | றி | ல | ப் | வே | று | சா | ட |
| கு | தி | நா | யி | னி | ந | ஞா | த | த் | ரூ |
| பெ | த் | றை | ன் | சா | மை | து | யூ | தே | யா |
| கே | ம | ம | க | த | லா | யா | ப் | லே | ல |
| க் | வ | டி | ட் | த | வ | றை | லி | ற் | ச |
| பா | அ | மே | ஒ | ர் | ள் | க | ணி | து | க |

1. கிறிஸ்துவே உங்களுக்கு __________ அளிப்பவர்.
2. ஆண்டவர் தோற்றுவித்த __________ நாள் இதுவே.
3. அவர் குனிந்து பார்த்த போது __________ கிடப்பதைக் கண்டார்.
4. __________ முதல் __________ முழுவதிலும் நடந்தது உங்களுக்குத் தெரியும்.
5. விடியற்காலையில் இருள் நீங்கும் முன்பே __________ மரியா கல்லறைக்குச் சென்றார்.
6. அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் அவரது பெயரால் __________ப் பெறுவர்.
7. நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்றவர்களானால் __________ சார்ந்தவற்றை நாடுங்கள்.
8. இயேசு இறந்து உயிர்த்தெழ வேண்டும் என்னும் __________ வாக்கை அவர்கள் அதுவரை புரிந்து கொள்ளவில்லை.



## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| முதலாம் வாசகம்: | திருத்தூதர்பணிகள் 10 : 34, 37 – 43 |
| பதிலுரைப்பாடல்: | திருப்பாடல் 118 : 1-2, 16-17, 22-23 |
| பதிலுரை: | ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே. இன்று அக்களிப்போம் அகமகிழ்வோம் |
| இரண்டாம் வாசகம்: | கொலோசையர் 3 : 1 – 4 |
| நற்செய்தி வாழ்த்தொலி: | நம் பாஸ்கா ஆடாகிய கிறிஸ்து பலியிடப் பட்டிருக்கிறார். ஆகவே நாம் பாஸ்காவைக் கொண்டாடுவோமாக! |
| நற்செய்தி வாசகம்: | யோவான் 20 : 1 – 9 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| முதல் வெள்ளி (ஆங்கிலம்) : | மாலை 7:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை (ஆங்கிலம்) : | காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) : | காலை 10:00 மணி |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 6:30 மணி<br>தொடர்ந்து திருப்பலி 7:30 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரிசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் இல்லத்திலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு.